*ஊடக வெளியீடு,*

HUTCH

## "GetnAiled" கேமிங் சவாலுக்கு தொடர்ச்சியான இரண்டாவது வருடமாக Hutch அனுசரணை

***உள்நாட்டு gaming ஆர்வலர்களை சர்வதேச மட்டத்துக்கு உயர்த்தும் 3G டேடா திட்டங்களின் முன்னோடி***

***e-விளையாட்டுக்கான டேடா பாவனை உள்நாட்டில் அதிகரித்த வண்ணமுள்ளது – திருக்குமார் நடராசா, பிரதம நிறைவேற்று அதிகாரி, Hutch***

***"GetnAiled" இரண்டாம் பருவகாலத்துக்கான பதிவுகள் Hutch Facebook பக்கத்தினூடாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன***

உள்நாட்டு கேமிங் ஆர்வலர்களை சர்வதேச மட்டத்தக்கு கொண்டு செல்லும் வகையில், "GetnAiled" கேமிங் சவால் 2015க்கு உத்தியோகபூர்வ அனுசரணையை வழங்க HUTCH முன்வந்துள்ளது. தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக ஏற்பாடு செய்யப்படும் "GetnAiled" சவால் போட்டி, 2015 ஜுலை 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் கொழும்பு 03 இல் அமைந்துள்ள, லிபர்டி பிளாஸாவின் வரவேற்பு பகுதியில் இடம்பெறும். இந்த போட்டித்தொடர், இலங்கையில் முதலாவது கேமின் கிளானாக திகழும் "n00b Alliance" முன்னெடுப்பதுடன், பங்காளராக Gamer.LK இணைந்துள்ளது.

கடந்த ஆண்டு, Hutch "GetnAiled" போட்டித்தொடர் கொழும்பு 4 இல் அமைந்துள்ள மஜெஸ்டிக் சிட்டியில் இடம்பெற்றது. இதில் 500க்கும் அதிகமான கேம் ஆர்வலர்கள் பங்குபற்றியிருந்தனர். 50 க்கும் அதிகமான அணிகள் பங்கேற்றிருந்தன. இந்த போட்டித்தொடரின் போது மிகவும் புகழ்பெற்றுத் திகழ்ந்த 'Call of Duty 4' பலர் (multiplayer) விளையாடும் சவாலாக உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு இடம்பெறும் போட்டித் தொடர் "bigger and better" எனும் வகையில் அமைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன், 70க்கும் அதிகமான அணிகள் இதில் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த போட்டித்தொடரில் பங்குபற்ற ஆர்வமுள்ள அணிகளை https://www.facebook.com/hutchsrilanka எனும் இணையத்தளத்தில் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுக்கு இந்த ஆண்டில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தும் வகையில், Hutch பொது மக்களுக்கு மினி போட்டித்தொடரை ஏற்பாடு செய்திருந்தது. இதில் பெருமளவான பார்வையாளர்கள் பங்கேற்றிருந்தனர். "Hutch Experience Zone" பகுதியில் ஏற்பாடு செய்யப்படும் மினி போட்டித் தொடரின் மூலமாக, புதிய கேம் ஆர்வலா்களுக்கு பெருமளவில் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருக்கும். அத்துடன், ஒன்லைன் பலர் (Multi player) கேம் அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதுடன், இறுதி வெற்றியாளருக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகளை வெல்வதற்கு சிறந்த வாய்ப்பாகவும் அமையும்.

*Hutch* இன் பிரதம நிறைவேற்று அதிகாரி திருக்குமார் நடராசா கருத்து தெரிவிக்கையில், ‘‘எமது டேடா பாவனையாளர்களுடன் தொடர்ச்சியாக ஈடுபடும் வர்த்தக நாமம் எனும் வகையில், *GetnAiled* போன்ற பொது மக்களுக்கான மிகப்பெரிய கேமிங் போட்டித்தொடர்களுடன் கைகோர்ப்பது எமது பொறுப்பு என நாம் கருதுகிறோம். இலங்கையின் *E*-விளையாட்டு துறை என்பது கடந்த சில வருடங்களில் பெருமளவு மாற்றத்தை எதிர்நோக்கியிருந்தது. புரோட்பான்ட் டேடா இணைப்புகள் அதிகளவில் பயன்பட ஆரம்பித்தமை இந்த மாற்றங்களுக்கு ஏதுவாக அமைந்திருந்தன. உள்நாட்டு கேமிங் ஆர்வலர்கள் மத்தியில் காணப்படும் ஆர்வம் என்பதும் அதிகரித்துள்ளதுடன், *E*-விளையாட்டுகளை பாவனையும் பெருமளவில் அதிகரித்து வருகிறது. இந்நிகழ்வுடன் எமது ஒன்றிணைவு என்பதன் மூலமாக, கேமிங் ஆர்வலர்களுக்கு மேலும் உயர்வான நிலையை எய்துவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்’’ என்றார்.

தமது பொறுப்புணர்வான செயற்பாடுகளுக்கு அப்பால் சென்று, Hutch ஸ்ரீ லங்கா நிறுவனம், இலங்கையைச் சேர்ந்த இரு கேமிங் அணிகளுக்கான அனுசரணையை வழங்க முன்வந்துள்ளது. இவற்றில் Xiphos மற்றும் nOOb alliance ஆகியன அடங்கியுள்ளன. உள்நாட்டில் காணப்படும் கேமிங் துறையில் மிகவும் பிரபல்யம் பெற்ற இரு அணிகளாக இவை திகழ்கின்றன.

**GetnAiled** ஐ ஏற்பாடு செய்யும் விகும் ஜயசேகர கருத்து தெரிவிக்கையில், ‘‘இந்த பங்காண்மை தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். *Hutch* ஸ்ரீ லங்காவின் அர்ப்பணிப்பு பாராட்டப்பட வேண்டியது. இலங்கையின் கேமிங் துறைக்கு வலுச்சேர்க்க இந்நிறுவனம் நிதியுதவிகள் மட்டுமல்லாமல், வலையமைப்பு தீர்வுகள் மற்றும் டேடா பாவனை போன்றவற்றை வழங்குவதன் மூலமாக முன்வந்துள்ளது. இதன் மூலமாக இந்நிகழ்வு மிகவும் வெற்றிகரமாக அமைந்துள்ளது. உலகளாவிய ரீதியில் கட்டிளம் பருவத்தினர் மற்றும் வயதுவந்தவர்கள் மத்தியில் கணினி கேம்கள் மற்றும் *e*-விளையாட்டுகள் போன்றன அதிகளவு பிரபல்யம் பெற்றனவாக அமைந்துள்ளன. கேம் ஆர்வலர்கள் போட்டிகரமான சுற்றுகளை ஏற்படுத்தியுள்ளதுடன், பெருமளவான நாடுகளில் கணினி கேம்கள் மற்றும் கொன்சோல் கேம்கள் நிபுணத்துவம் வாய்ந்த விளையாட்டுகளில் ஒன்றாக கருதப்படுகின்றன’’ என்றார்.

**பட விளக்கம்:**

1. 2014 "Hutch GetnAiled" நிகழ்வில் பங்குபற்றிய பெருமளவான கேமிங் ஆர்வலர்களை காணலாம்.